BELLWETHER INTERNATIONAL

பிலேமோன் - விரிவுரை
PHILEMON - COMMENTARY

GOOD NEWS PUBLISHERS

முன்னுரை

பிலேமோன் கொலோசெ சபையிலுள்ள ஒரு ஊழியக்காரராகயிருக்க வேண்டுமென்று வேதபண்டிதர்கள் சொல்லுகிறார்கள். கொலோசெ பட்டணம் பிரிகியா தேசத்திலுள்ளது. இவருக்கு ஒநேசிமு என்னும் பெயரில் ஒரு வேலைக்காரர் இருந்தார். இவர் பிலேமோனின் பொருளுக்கு நஷ்டம் ஏற்படுத்தியிருக்கவேண்டும். அல்லது அவருடைய பொருளை திருடி எடுத்துக்கொண்டு, அவரை விட்டு ஓடிவந்திருக்கவேண்டும்.

ஒநேசிமு பிலேமோனுக்குத் தப்பி ரோமாபுரிக்கு ஓடிவருகிறார். அப்போது பவுல் அங்கு சுவிசேஷத்திற்காக சிறைச்சாலையில் அடைக்கப்பட்டிருக்கிறார். ஒநேசிமுக்கும் பவுலுக்கும் சிநேகமுண்டாகிறது. தேவனுடைய கிருபையினாலே, பவுலின் ஊழியத்தினால் ஒநேசிமு இரட்சிக்கப்படுகிறார். இதன்பின்பு, ஒநேசிமு சிறைச்சாலையிலுள்ள பவுலுக்கு சிறிதுகாலம் உதவியாகயிருக்கிறார்.

ஒநேசிமு பவுலின் வேலைக்காரரல்ல. அவர் பிலேமோனுக்கு வேலைக்காரர். பிலேமோனுடைய அனுமதியில்லாமல் ஒநேசிமுவைத் தன்னிடத்தில் வைத்துக்கொள்வது தவறானது என்று பவுல் நினைக்கிறார். அவரை மறுபடியும் பிலேமோனிடம் திருப்பி அனுப்பிவிடவேண்டுமென்று தீர்மானித்து, ஒநேசிமுவைப்பற்றி நல்ல வார்த்தைகளை ஒரு நிருபத்தில் எழுதுகிறார். அந்த நிருபத்தோடு ஒநேசிமுவை பிலேமோனிடத்திற்கு அனுப்புகிறார்.

பிலேமோன் ஒநேசிமுவின்மீது அன்புகூர்ந்து அவன் செய்த தப்பிதங்களை மன்னித்துவிடுமாறு பவுல் அவனுக்காக மன்றாடுகிறார். பிலேமோன் ஒநேசிமுவை மன்னித்து ஏற்றுக்கொண்டாரா என்று இந்த நிருபத்தில் எழுதப்படவில்லை. ஆனாலும் பிலேமோன் பவுலின் வார்த்தைக்கு மதிப்புக்கொடுத்து, ஒநேசிமுவை மன்னித்து ஏற்றுக்கொண்டிருப்பார் என்று வேதபண்டிதர்கள் சொல்லுகிறார்கள்.

1 அதிகாரம்

முன்னுரை (பிலே 1:1-7), நிருபத்தின் விவரம் (பிலே 1:8-21), முடிவுரை (பிலே 1:22-25).

பிலேமோன்
பிலே 1 : 1-7

பிலே 1:1. கிறிஸ்து இயேசுவினிமித்தம் கட்டப்பட்டவனாயிருக்கிற பவுலும், சகோதரனாகிய தீமோத்தேயும், எங்களுக்குப் பிரியமுள்ளவனும் உடன் வேலையாளுமாயிருக்கிற பிலேமோனுக்கும்,

பிலே 1:2. பிரியமுள்ள அப்பியாளுக்கும், எங்கள் உடன் போர்ச்சேவகனாகிய அர்க்கிப்புவுக்கும், உம்முடைய வீட்டிலே கூடிவருகிற சபைக்கும் எழுதுகிறதாவது:

பிலே 1:3. நம்முடைய பிதாவாகிய தேவனாலும், கர்த்தராகிய இயேசுகிறிஸ்துவினாலும், உங்களுக்குக் கிருபையும் சமாதானமும் உண்டாவதாக.

பிலே 1:4. கர்த்தராகிய இயேசுவினிடத்திலும், எல்லாப் பரிசுத்தவான்களிடத்திலுமுள்ள உம்முடைய அன்பையும் உம்முடைய விசுவாசத்தையும் நான் கேள்விப்பட்டு,

பிலே 1:5. என் ஜெபங்களில் உம்மை நினைத்து, எப்பொழுதும், என் தேவனுக்கு ஸ்தோத்திரஞ்செய்து,

பிலே 1:6. உங்களிலுள்ள சகல நன்மைகளும் தெரியப்படுகிறதினாலே உம்முடைய விசுவாசத்தின் அந்நியோந்நியம் கிறிஸ்து இயேசுவுக்காகப் பயன்பட வேண்டுமென்று வேண்டுதல் செய்கிறேன்.

பிலே 1:7. சகோதரனே, பரிசுத்தவான்களுடைய உள்ளங்கள் உம்மாலே இளைப்பாறினபடியால், உம்முடைய அன்பினாலே மிகுந்த சந்தோஷமும் ஆறுதலும் அடைந்திருக்கிறோம்.

இந்த நிருபத்தின் முதல் இரண்டு வசனங்களில், இந்த நிருபத்தை எழுதுவது யார் என்னும் விவரமும், இந்த நிருபம் யாருக்கு எழுதப்பட்டிருக்கிறது என்னும் விவரமும் உள்ளது. அப்போஸ்தலர் பவுல் தன்னைப்பற்றிச் சொல்லும்போது, "கிறிஸ்து இயேசுவினிமித்தம் கட்டப்பட்டவனாயிருக்கிற பவுல்" (பிலே 1) என்று சொல்லுகிறார். பவுல் பிலேமோனிடம் ஒநேசிமுவுக்காக மன்றாடுகிறார். தன்னுடைய மன்றாட்டை பிலேமோன் அங்கீகரிக்கவேண்டும். அதற்காக ஆரம்பத்திலேயே பவுல் தன்னைப்பற்றி மிகவும் தாழ்மையாக எழுதுகிறார். தான் கிறிஸ்து இயேசுவினிமித்தம் கட்டப்பட்டவனென்று தன்னைப்பற்றிச் சொல்லுகிறார்.

இந்த நிருபத்தை தான் மாத்திரம் எழுதுவதாக பவுல் சொல்லவில்லை. தன்னோடுகூட சகோதரனாகிய தீமோத்தேயுவும் இந்த நிருபத்தை எழுதுவதாகக் குறிப்பிடுகிறார். இரண்டு ஊழியக்காரர்கள் இந்த நிருபத்தை பிலேமோனுக்கு எழுதுகிறார்கள். இவர்கள் இருவருமே முக்கியமான ஊழியர்கள். இவர்கள் இருவரும் சேர்ந்து ஒநேசிமுக்காக மன்றாடும்போது, அவர்களுடைய மன்றாட்டை பிலேமோன் மறுக்கமாட்டார்.

இந்த நிருபம் பிலேமோனுக்கும் அப்பியாளுக்கும் எழுதப்படுகிறது. அவர்களோடுகூட அர்கிப்பு என்பவரும், அவர்களுடைய வீட்டிலே கூடிவருகிற சபையாரும் இருக்கிறார்கள். பிலேமோன் ஒநேசிமுவின் எஜமான். இவர் நற்குணமுள்ளவர். கர்த்தருடைய ஊழியத்தைச் செய்கிறவர். இந்த நிருபம் பிலேமோனுக்கு விசேஷமாக எழுதப்படுகிறது. ஆகையினால் பவுல் பிலேமோனைப்பற்றிச் சொல்லும்போது, "எங்களுக்குப் பிரியமுள்ளவனும் உடன் வேலையாளுமாயிருக்கிற பிலேமோன்" (பிலே 1) என்று எழுதுகிறார். இவர் கர்த்தருடைய ஊழியத்தைச் செய்வதினாலும், நற்குணமுள்ளவரா யிருப்பதினாலும், இவர் பவுலுக்குப் பிரியமுள்ளவராகவும், உடன் வேலையாளாகவும் இருக்கிறார்.

பவுல் பிலேமோனைப்பற்றி எழுதும்போது, அவரோடுகூட அப்பியாளைப்பற்றியும் எழுதுகிறார். ஒருவேளை அப்பியாள் பிலேமோனுக்கு உடன்ஊழியக்காரியாக இருக்கலாம். பவுல் அப்பியாளை, "பிரியமுள்ள அப்பியாள்" (பிலே 2) என்று குறிப்பிடுகிறார். ஒருவேளை ஒநேசிமு அப்பியாளை காயப்படுத்தியிருக்கவேண்டும். அல்லது அவளுக்கு ஏதாவது தீங்கு செய்திருக்கவேண்டும். ஆகையினால் பவுல் பிலேமோனுக்கு இந்த நிருபத்தை எழுதும்போது, அப்பியாளுக்கும் சேர்த்து எழுதுகிறார். ஒநேசிமு அப்பியாளோடு ஒப்புரவாகவேண்டும். அப்பியாளும் ஒநேசிமுவை மன்னிக்கவேண்டும். பவுல் பிலேமோனுக்கு எழுதின இந்த நிருபம் இவ்விரண்டு பேருக்கும் விசேஷமாக எழுதப்பட்டிருக்கிறது.

பவுல் இந்த நிருபத்தில் அர்க்கிப்புவைப்பற்றியும், பிலேமோனுடைய வீட்டிலே கூடிவருகிற சபையைப்பற்றியும் எழுதுகிறார். அர்க்கிப்பு பிலேமோனுடைய சிநேகிதர். கொலோசெ சபையிலுள்ள ஒரு ஊழியக்காரர். அர்க்கிப்பு தன்னுடைய நிருபத்தை படித்து பிலேமோனுக்கு நல்ல ஆலோசனை சொல்லுவார் என்று பவுல் எதிர்பார்க்கிறார். ஒநேசிமுவின் காரியம் சாதகமாக நடைபெறுவதற்கு அர்க்கிப்பு ஒருவேளை உதவிபுரியலாம். கர்த்தருடைய ஊழியக்காரர்கள் சமாதானம் பண்ணுகிறவர்கள். அர்க்கிப்பு சமாதானம் பண்ணுகிற ஊழியத்தைச் செய்யவேண்டும். பிலேமோனும் அப்பியாளும் ஒநேசிமுவை மன்னிப்பதற்கு அர்க்கிப்பு உதவியாயிருக்கவேண்டும்.

பவுல் இந்த நிருபத்தை பிலேமோனுடைய வீட்டிலே கூடிவருகிற சபையாருக்கும் எழுதுகிறார். ஒருவேளை இந்த சபையில் பிலேமோனுடைய முழுக்குடும்பத்தாரும் கூடிவந்து கர்த்தரை ஆராதிக்கலாம். ஆதித்திருச்சபையில், பல பட்டணங்களில், விசுவாசிகள் இதுபோல வீடுகளில் கூடிவந்து கர்த்தரை ஆராதனை செய்தார்கள். பக்தியுள்ள குடும்பத்தார் தங்கள் வீடுகளிலேயே கர்த்தரை ஆராதித்து, தங்களுடைய உற்றார் உறவினர் மத்தியிலே கர்த்தருக்குச் சாட்சியாக ஜீவித்தார்கள். அவர்கள் துன்மார்க்கர் மத்தியிலும், அவிசுவாசிகள் மத்தியிலும் குடியிருந்தாலும், தங்கள் வீடுகளில் கர்த்தரை ஆராதித்து அவரை மகிமைப்படுத்தினார்கள். இவர்கள் மூலமாய் கர்த்தருடைய நாமம் புறஜாதிகள் மத்தியிலே மகிமைப்படுத்தப்பட்டது.

பக்தியுள்ள குடும்பங்களில் ஒரு சில துன்மார்க்கரும் கலந்துவிடுகிறார்கள். பிலேமோனுடைய வீட்டில் எப்படியோ ஒநேசிமுவும் சேர்ந்துவிட்டான். அவன் பிலேமோனுக்கு விரோதமாக தவறு செய்திருக்கிறான். பிலேமோனுடைய வீட்டில் சபை கூடிவருகிறது. ஒநேசிமு இந்த வீட்டிலே கிறிஸ்துவைப்பற்றியும், அவருடைய சுவிசேஷத்தைப்பற்றியும் கற்றுக்கொள்ளலாம். ஆனால் அவனோ தன் எஜமானுக்கு நன்மை செய்யாமல் தீங்கு செய்துவிடுகிறான். பிலேமோனுடைய வீட்டில் ஒருவன் தீங்கு செய்தாலும், அவருடைய வீட்டில் சபை கூடிவருவது நின்றுபோய்விடவில்லை.

கர்த்தருடைய பிள்ளைகளெல்லோருமே தங்கள் வீடுகளில் கர்த்தரை ஆராதிக்கவேண்டும். குடும்பத்தில் நடைபெறுகிற ஆராதனை, சபை ஆராதனைபோல இருக்கவேண்டும். குடும்பத்தாருக்கு கிறிஸ்துவின் சுவிசேஷத்தைக் கற்றுக்கொடுக்க வேண்டும். பக்தியுள்ள குடும்பத்திலுள்ளவர்கள் நல்ல சுபாவங்களில் போதிக்கப்பட்டு, பக்தி விருத்திக்கேதுவாக வளர்க்கப்படுவார்கள். துன்மார்க்கருடைய குடும்பத்திலோ துன்மார்க்கமான உபதேசம் இருக்கும். அவர்கள் துன்மார்க்கத்திற்கேதுவாக வளர்க்கப்படுவார்கள். பக்தியுள்ளவர்கள் பரலோகத்திற்குத் தங்களை ஆயத்தப்படுத்துவார்கள், துன்மார்க்கர் நரகத்திற்கு நேராக வேகமாய் ஓடுவார்கள்.

ஒநேசிமுவுக்காக எல்லோருமே உதவிசெய்யவேண்டுமென்று பவுல் விரும்புகிறார். அதனால் இந்த நிருபத்தின் முன்னுரையில் எல்லோரையும் குறிப்பிட்டு எழுதுகிறார். அவர்களெல்லோரும் பிலேமோன் மீது அன்பாகயிருக்கிறார்கள். பவுல் அவர்கள் எல்லோர்மீதும் அன்பாகயிருக்கிறார். தன்னுடைய நிருபத்திற்கு அவர்களெல்லோரும் செவிகொடுப்பார்கள் என்று பவுல் எதிர்பார்க்கிறார். தன்னுடைய மன்றாட்டை பிலேமோன் அங்கீகரிப்பார் என்று எதிர்பார்த்து பவுல் இந்த நிருபத்தை நம்பிக்கையோடு எழுதுகிறார்.

ஒநேசிமு பிலேமோனிடம் திரும்பிப்போகவேண்டும். பிலேமோன் அவரை மன்னித்து ஏற்றுக்கொள்ள வேண்டும். ஒநேசிமு இனிமேல் எந்தத் தப்பிதமும் செய்யக்கூடாது. ஒநேசிமுவும் பிலேமோனும் ஒப்புரவாகவேண்டும். பிலேமோன் ஒநேசிமுவை மன்னிக்க வேண்டும். ஒநேசிமு இனிமேல் ஊழியத்திற்குத் தடையாக இருக்கக் கூடாது. எல்லோருமாகச் சேர்ந்து அங்கு கர்த்தருடைய ஊழியத்தைச் செய்யவேண்டுமென்று பவுல் விரும்புகிறார்.

அப்போஸ்தலர் பவுல் இந்த நிருபத்தை யாருக்கு எழுதுகிறாரோ அவர்களுக்கு ஆசீர்வாதம் சொல்லுகிறார். அவர்களுக்கு நன்மையான காரியங்கள் உண்டாகவேண்டுமென்று அவர்களை வாழ்த்துகிறார். அவர்களுக்கு பொன், வெள்ளி, உலகப்பிரகாரமான ஆசீர்வாதங்கள் ஆகியவை உண்டாக வேண்டுமென்று பவுல் வாழ்த்தவில்லை. அதற்குப் பதிலாக அவர்களுக்கு கிருபையும், சமாதானமும் உண்டாவதாக என்று வாழ்த்துகிறார். கிருபையும் சமாதானமும் நம்முடைய பிதாவாகிய தேவனாலும் கர்த்தராகிய இயேசுகிறிஸ்துவினாலும் உண்டாகிறது (பிலே 3).

கிருபையே எல்லா ஆசீர்வாதங்களுக்கும் ஆதாரம். கிருபையின் விளைவினால் நன்மை உண்டாகிறது. நன்மையின் மொத்த வடிவமே சமாதானம். பிதாவாகிய தேவன், கர்த்தராகிய இயேசுகிறிஸ்துவில், நமக்கும் பிதாவாகயிருக்கிறார். குமாரனாகிய கிறிஸ்துவானவர், பிதாவாகிய தேவனுக்கும் நமக்கும் நடுவே மத்தியஸ்தராகயிருக்கிறார். பிதாவின் ஆசீர்வாதங்களையும், கிருபைகளையும், நன்மைகளையும் நம்முடைய கர்த்தராகிய இயேசுகிறிஸ்துவின் மூலமாகவே நாம் பெற்றுக்கொள்கிறோம்.

தேவனுடைய கிருபையும், அவருடைய சிலாக்கியமும், நாம் அவரோடு சமாதானமாகயிருப்பதும் நமக்கு மிகுந்த ஆசீர்வாதம். இதுவே நமக்கு மேன்மையான நன்மை. மற்ற எல்லா ஆசீர்வாதங்களுக்கும் இதுவே ஆதாரம். நாம் தேவனோடு ஒப்புரவாக்கப்பட்டு, சமாதானமாயிருக்கும்போது, தேவனுடைய கிருபையையும் இரக்கத்தையும் பூரணமாகப் பெற்றுக்கொள்ளலாம். இப்பிரபஞ்சத்தின் காரியங்களில் நாம் குறைவுள்ளவர்களாகயிருந்தாலும், தேவனுடைய கிருபையிலும் இரக்கத்திலும் நாம் ஐசுவரியமுள்ளவர்களாகயிருப்போம்.

அப்போஸ்தலர் பவுல் பிலேமோனிடத்தில் அதிக அன்பு வைத்திருக்கிறார். அவருடைய அன்பையும் விசுவாசத்தையும் பவுல் கேள்விப்பட்டிருக்கிறார். அவருக்காக பவுல் தேவனிடத்தில் ஸ்தோத்திரம்பண்ணுகிறார். பிலேமோனுக்காக கர்த்தரிடத்தில் விண்ணப்பம்பண்ணுகிறார். பிலேமோனைப் பற்றி அநேக நற்காரியங்களைத் தெரிந்து வைத்திருப்பது பவுலுக்கு மிகுந்த சந்தோஷமாயிருக்கிறது (பிலே 4).

நாம் கர்த்தருடைய சமுகத்தில் வரும்போது துதிகளோடும், ஸ்தோத்திரங்களோடும், விண்ணப்பங் களோடும் வரவேண்டும். பவுல் தன்னுடைய ஜெபத்தைப்பற்றிச் சொல்லும்போது, "என் தேவனுக்கு ஸ்தோத்திரம் செய்கிறேன்" (பிலே 5) என்று குறிப்பிடுகிறார். நாம் கர்த்தருடைய சமுகத்தில் ஸ்தோத்திரங்களையும் விண்ணப்பங் களையும் பண்ணும்போது, அவற்றை நமக்காக மாத்திரம் ஏறெடுக்கக்கூடாது. மற்றவர்களுக்காகவும் ஜெபிக்கவேண்டும். மற்றவர்களுக்காகவும் கர்த்தரை ஸ்தோத்திரம் செய்யவேண்டும்.

கர்த்தருடைய பரிசுத்தவான்கள் எப்பொழுதும் தேவனுக்கு ஸ்தோத்திரம் செய்யவேண்டும். பவுல் தன்னுடைய தனிப்பட்ட ஜெபங்களிலும், ஸ்தோத்திர வேளைகளிலும், அவர் தன்னுடைய சிநேகிதர்களை நினைவுகூருவது வழக்கம். பவுல் தன்னுடைய ஜெபத்தின் மூலமாய், தன் சிநேகிதர்மீது தான் வைத்திருக்கிற அன்பை வெளிப்படுத்துகிறார். அவர்களுக்கு நன்மை உண்டாகவேண்டுமென்று விரும்புகிறார். அவர்களுக்காக விண்ணப்பம்செய்கிறார். கர்த்தருடைய சமுகத்திலிருந்து அவர்களுக்கு நன்மைகளைப் பெற்றுத்தருகிறார்.

அப்போஸ்தலர் பவுல் எப்பொழுதும் தேவனுக்கு ஸ்தோத்திரம் செய்கிறார். நம்முடைய சிநேகிதருக்காக நாம் எப்போதாவது ஜெபித்தால் போதாது. எப்போதும் ஜெபிக்கவேண்டும். அவர்களுக்கு தேவை உண்டாகும் போதெல்லாம், அவர்கள் சார்பாக நாம் கர்த்தருடைய சமுகத்தில் விண்ணப்பம் பண்ணவேண்டும். கர்த்தர் அவர்களுக்குச் செய்த நன்மைகளை நினைத்து, நாம் எப்போதும் கர்த்தருக்கு ஸ்தோத்திரம் செய்யவேண்டும்.

பிலேமோன் கர்த்தராகிய இயேசுகிறிஸ்துவினிடத்திலும் எல்லா பரிசுத்தவான்களிடத்திலும் அன்புள்ளவராக யிருக்கிறார் (பிலே 6). கிறிஸ்துவின்மீது அன்புகூருவதும், கிறிஸ்துவினிடத்தில் விசுவாசம் வைப்பதும் கர்த்தருடைய பிள்ளைகளுக்கு மிகுந்த ஆசீர்வாதத்தைத் தரும். நாம் கிறிஸ்துவினிடத்தில் அன்புகூருவதினால் நாம் அவருக்கு ஸ்தோத்திரங்களை ஏறெடுக்கிறோம்.

பிலேமோன் எல்லா பரிசுத்தவான்களிடத்திலும் அன்புள்ளவரா யிருக்கிறார். பிலேமோனிடத்தில் இரண்டு நற்குணங்கள் காணப்படுகிறது. அவர் கர்த்தராகிய இயேசுவினிடத்திலும் அன்புள்ளவராகயிருக்கிறார். எல்லா பரிசுத்தவான்களிடத்திலும் அன்புள்ளவராக யிருக்கிறார். விசுவாசிகளாகிய நமக்குள் சமுதாய ரீதியாகவும், பொருளாதார ரீதியாகவும் வித்தியாசங்கள் இருக்கலாம். கர்த்தரிடத்தில் பட்சபாதமில்லை. கர்த்தருடைய பிள்ளைகளாகிய நம்மிடத்திலும் பட்சபாதம் இருக்கக்கூடாது. கர்த்தருடைய எல்லா பரிசுத்தவான்களிடத்திலும், நாம் பட்சபாதமில்லாமல், அன்புகூரவேண்டும். கர்த்தருடைய பரிசுத்த சமுகத்திற்கு முன்பாக நாம் எல்லோருமே அவருடைய பிள்ளைகளாகத்தான் இருக்கிறோம்.

ஒநேசிமு சாதாரண அடிமை. பவுலுடைய ஊழியத்தின் மூலமாய் அவர் இரட்சிக்கப்பட்டவர். ஆனாலும் பவுல் ஒநேசிமுவைப்பற்றிச் சொல்லும்போது, "நான் பெற்ற என் மகன்" என்று சொல்லுகிறார். ஒநேசிமுமீது பவுல் அதிக அன்பு வைத்திருக்கிறார். பவுலைப்போலவே நாமும் எல்லா விசுவாசிகளையும் நேசிக்கவேண்டும். தேவன் நம்மிடத்தில் அன்புகூருவதுபோல, நாமும் எல்லா பரிசுத்தவான்களிடத்திலும் அன்புகூரவேண்டும்.

பரிசுத்தவான்களிடத்தில் நாம் வைத்திருக்கிற அன்பில் மாய்மாலம் இருக்கக்கூடாது. எல்லா பரிசுத்தவான்களிடத்திலும் ஒன்றுபோலவே அன்புகூரவேண்டும். எல்லா விசுவாசிகளிடத்திலும் விசுவாசமும் அன்பும் இணைந்து கிரியை நடப்பிக்கவேண்டும். இவை நம்முடைய இருதயத்தில் மறைந்திருக்கும் சுபாவங்கள். நம்முடைய கனிகளினால் நம்முடைய இருதயத்தில் இருக்கிற அன்பும் விசுவாசமும் வெளிப்படும்.

அப்போஸ்தலர் பவுல் தேவனுக்கு ஸ்தோத்திரம்பண்ணும்போது, பிலேமோனுக்காக கர்த்தரிடத்தில் வேண்டுதலும் செய்கிறார். பிலேமோனுடைய விசுவாசத்தின் அந்நியோந்நியம் கிறிஸ்து இயேசுவுக்காக பயன்படவேண்டுமென்று அவருக்காக விண்ணப்பம் பண்ணுகிறார். நம்மிடத்திலுள்ள அன்பும் விசுவாசமும் ஒருபோதும் குறைந்துபோகக்கூடாது. கிறிஸ்துவின்மீதும், அவருடைய பரிசுத்தவான்கள்மீதும் நாம் தொடர்ந்து அன்புகூரவேண்டும்.

நாம் கிறிஸ்துவுக்குரியவர்கள். கிறிஸ்துவின் சபையைச் சேர்ந்தவர்கள். நம்மிடத்தில் காணப்படுகிற நற்குணங்கள், அவிசுவாசிகள் மத்தியிலே கிறிஸ்துவின் நாமத்தை மகிமைப்படுத்தவேண்டும். கிறிஸ்துவில் நாம் வைத்திருக்கிற விசுவாசம் புறஜாதியார் மத்தியில் வெளிப்படவேண்டும். நம்முடைய விசுவாசத்தில் அந்நியோந்நியம் காணப்படவேண்டும். அது கிறிஸ்து இயேசுவுக்காகப் பயன்படவேண்டும். கர்த்தருடைய பரிசுத்தவான்களும், புறஜாதி ஜனங்களும் நம்முடைய நற்கிரியைகளின் மூலமாய் பிரயோஜனப்படவேண்டும்.

பரிசுத்தவான்களுடைய உள்ளங்கள் பிலேமோனாலே இளைப்பாறியிருக்கிறது. அவருடைய அன்பினால் பரிசுத்தவான்களுக்கு மிகுந்த சந்தோஷமும் ஆறுதலும் உண்டாயிருக்கிறது. அப்போஸ்தலர் பவுல் அதற்காக தேவனுக்கு ஸ்தோத்திரம் செய்கிறார். அவர் செய்கிற நன்மைகள் பெருகவேண்டுமென்று, பவுல் அவருக்காக கர்த்தரிடத்தில் விண்ணப்பம் பண்ணுகிறார். பிலேமோன் ஏராளமான பரிசுத்தவான்களுக்குப் பிரயோஜனமுள்ளவராகயிருக்கிறார். அவருடைய நற்கிரியைகள் தொடர வேண்டுமென்றும், அவர் தொடர்ந்து கனிகொடுக்க வேண்டுமென்றும் பவுல் அவருக்காக விண்ணப்பம்பண்ணுகிறார். கர்த்தருடைய பிள்ளைகளாகிய நாம், நம்முடைய ஆவிக்குரிய ஜீவியத்தில் நற்கனிகளைக் கொடுக்கவேண்டும்.

ஒநேசிமுக்காக மன்றாடுகிறேன்
பிலே 1 : 8-21

பிலே 1:8. ஆகையால், பவுலாகிய நான் முதிர்வயதுள்ளவனாகவும், இயேசு கிறிஸ்துவினிமித்தம் இப்பொழுது கட்டப்பட்டவனாகவும் இருக்கிறபடியால்,

பிலே 1:9. நீர் செய்யத்தக்கதை உமக்குக் கட்டளையிடும்படிக்குக் கிறிஸ்துவுக்குள் நான் துணியத் தக்கவனாயிருந்தாலும், அப்படிச் செய்யாமல், அன்பினிமித்தம் மன்றாடுகிறேன்.

பிலே 1:10. என்னவென்றால், கட்டப்பட்டிருக்கையில் நான் பெற்ற என் மகனாகிய ஒநேசிமுக்காக உம்மை மன்றாடுகிறேன்.

பிலே 1:11. முன்னே அவன் உமக்குப் பிரயோஜனமில்லாதவன், இப்பொழுதோ உமக்கும் எனக்கும் பிரயோஜனமுள்ளவன்.

பிலே 1:12. அவனை நான் உம்மிடத்திற்கு அனுப்புகிறேன்; என் உள்ளம் போலிருக்கிற அவனை நீர் ஏற்றுக்கொள்ளும்;

பிலே 1:13. சுவிசேஷத்தினிமித்தம் கட்டப்பட்டிருக்கிற எனக்கு ஊழியஞ் செய்யும்படி உமக்குப் பதிலாக அவனை என்னிடத்தில் வைத்துக் கொள்ள வேண்டுமென்றிருந்தேன்.

பிலே 1:14. ஆனாலும் நீர் செய்யும் நன்மையைக் கட்டாயத்தினாலல்ல, மனப்பூர்வமாய்ச் செய்யத்தக்கதாக, நான் உம்முடைய சம்மதியில்லாமல் ஒன்றும் செய்ய எனக்கு மனதில்லை.

பிலே 1:15. அவன் என்றென்றைக்கும் உம்முடையவனாயிருக்கும் படிக்கும், இனிமேல் அவன் அடிமையான வனாகவல்ல, அடிமையானவனுக்கு மேலானவனாகவும் பிரியமுள்ள சகோதரனாகவுமிருக்கும் படிக்கும் கொஞ்சக்காலம் உம்மைவிட்டுப் பிரிந்துபோனானாக்கும்.

பிலே 1:16. எனக்கு அவன் பிரியமான சகோதரனானால், உமக்கு சரீரத்தின்படியேயும் கர்த்தருக்குள்ளும் எவ்வளவு பிரியமுள்ளவனாயிருக்க வேண்டும்!

பிலே 1:17. ஆதலால், நீர் என்னை உம்மோடே ஐக்கியமானவனென்று எண்ணினால், என்னை ஏற்றுக்கொள்வதுபோல அவனையும் ஏற்றுக்கொள்ளும்.

பிலே 1:18. அவன் உமக்கு யாதொரு அநியாயஞ்செய்ததும், உம்மிடத்தில் கடன்பட்டதும் உண்டானால், அதை என் கணக்கிலே வைத்துக்கொள்ளும்.

பிலே 1:19. பவுலாகிய நான் இதை என் சொந்தக்கையாலே எழுதினேன், நான் அதைச் செலுத்தித் தீர்ப்பேன். நீர் உம்மைத்தாமே எனக்குக் கடனாகச் செலுத்த வேண்டுமென்று நான் உமக்குச் சொல்ல வேண்டியதில்லையே.

பிலே 1:20. ஆம், சகோதரனே, கர்த்தருக்குள் உம்மாலே எனக்குப் பிரயோஜனமுண்டாகட்டும்; கர்த்தருக்குள் என் உள்ளத்தை இளைப்பாறப்பண்ணும்.

பிலே 1:21. நான் சொல்லுகிறதிலும் அதிகமாய்ச் செய்வீரென்று அறிந்து, இதற்கு நீர் இணங்குவீரென்று நிச்சயித்து, உமக்கு எழுதியிருக்கிறேன்.

அப்போஸ்தலர் பவுல் ஒநேசிமுவுக்காக பிலோமோனிடத்தில் மன்றாடுகிறார். பவுல் இந்த நிருபத்தை எழுதுவதன் நோக்கமும் இதுதான். தன்னுடைய மன்றாட்டை உறுதிபண்ணுவதற்கு பவுல் பல சம்பவங்களைச் சொல்லுகிறார். பிலேமோன் பவுலின் வார்த்தைகளையெல்லாம் கரிசனையோடு சிந்தித்துப் பார்க்கவேண்டும். ஒநேசிமுவை மன்னித்து தன்னிடமாகச் சேர்த்துக்கொள்ளவேண்டும்.

பரிசுத்தவான்களுடைய உள்ளங்கள் பிலேமோனாலே இளைப்பாறிற்று. கர்த்தருடைய ஊழியக்காரர்கள் அவருடைய அன்பினாலே மிகுந்த சந்தோஷமும் ஆறுதலும் அடைந்திருக்கிறார்கள். இப்போது தன்னுடைய அன்பையும் கரிசனையையும் வெளிப்படுத்துவதற்கு பிலேமோனுக்கு மற்றும் ஒரு வாய்ப்பு உண்டாயிருக்கிறது. ஏற்கெனவே அவர் அநேக நன்மைகளைச் செய்திருக்கிறார். இப்போது ஒநேசிமுவுக்காக இந்த நன்மையையும் செய்யும்போது, அவருக்கு மிகுந்த ஆசீர்வாதமுண்டாகும். நாம் ஏற்கெனவே நன்மை செய்தது போதும் என்று நினைக்கக் கூடாது. நன்மைகளை நிறுத்திவிடக்கூடாது. தொடர்ந்து நன்மை செய்யவேண்டும்.

அப்போஸ்தலர் பவுலுக்கு பிலேமோன்மீது அப்போஸ்தல அதிகாரமுள்ளது. அவர் என்ன செய்யவேண்டுமென்று பவுல் அவருக்கு கட்டளை கொடுக்கலாம். ஆனால் பவுலோ பிலேமோனுக்குக் கட்டளை கொடுக்காமல், அன்பினிமித்தம் அவர்களிடத்தில் மன்றாடுகிறார் (பிலே 9).

அப்போஸ்தலர் பவுல் தன்னுடைய அதிகாரத்தினிமித்தம் பிலேமோனுக்குக் கட்டளையிடாமல், அன்பினிமித்தம் அவரிடத்தில் மன்றாடுகிறார். அதிகாரத்திற்குக் கீழ்ப்படிகிறவர்களைவிட அன்புக்குக் கீழ்ப்படிகிறவர்கள் அநேகர். அப்போஸ்தலர் பவுல் பிலேமோனுக்கு கட்டளைகொடுக்காமல், அன்பினிமித்தம் மன்றாடினாலும், அவர் தனக்கு செவிகொடுப்பாரென்றும், தன்னுடைய மன்றாட்டிற்கு சம்மதம் தெரிவிப்பார் என்றும் பவுல் கர்த்தருக்குள் நம்பிக்கையாயிருக்கிறார்.

அப்போஸ்தலர் பவுல் இப்போது முதிர்வயதுள்ளவராயிருக்கிறார். இயேசு கிறிஸ்துவினிமித்தம் ரோமாபுரியிலுள்ள சிறைச்சாலையில் கட்டப்பட்டிருக்கிறார். பவுலுக்கு உதவி தேவைப்படுகிறது. பவுலுடைய முதிர் வயதிற்கு பிலேமோன் மாத்திரமல்ல, நற்குணமுள்ள யார் வேண்டுமானாலும் மதிப்பு கொடுப்பார்கள். பவுல் இந்த முதிர்வயதில் கிறிஸ்துவுக்காகப் பாடுகளை அனுபவிக்கிறார். கிறிஸ்துவினிமித்தம் கட்டப்பட்டவராகயிருக்கிறார். கிறிஸ்துவின் சுவிசேஷத்தினிமித்தம் பவுலைக் காவலில் வைத்திருக்கிறார்கள். கர்த்தருக்காக பாடுகளை அனுபவிக்கிற ஊழியக்காரர்களுக்கு, மற்ற ஊழியக்காரர்களும், விசுவாசிகளும் உதவிபுரியவேண்டும். அவர்களுடைய வேண்டுகோள்களை கரிசனையோடு நிறைவேற்றவேண்டும் (பிலே 8).

அப்போஸ்தலர் பவுல் தனக்கும் ஒநேசிமுவுக்கும் இடையிலுள்ள ஆவிக்குரிய உறவைப்பற்றிச் சொல்லுகிறார். ஒநேசிமுவை, "கட்டப்பட்டிருக்கையில் நான் பெற்ற என் மகன்" என்று சொல்லுகிறார். ஒநேசிமு பவுலுக்கு மிகவும் அன்பானவர். பவுல் பிலேமோன்மீதும் அன்பாகயிருக்கிறார். ஒருவருக்கொருவர் அன்புகூருவதினால், பிலேமோன் தன்னுடைய மன்றாட்டிற்கு சம்மதம் தெரிவிப்பார் என்று எதிர்பார்த்து, ஒநேசிமுவை தான் பெற்ற மகன் என்று சொல்லுகிறார். அவரை தான் கட்டப்பட்டிருக்கையில் பெற்றதாகச் சொல்லி, பிலேமோனின் அனுதாபத்தை நாடுகிறார். சிறையில் கட்டப்பட்டிருக்கிறவர்களுக்கு, வாய்ப்பு கிடைக்கும்போது, நாம் சந்தோஷமாய் உதவிபுரியவேண்டும்.

ஒநேசிமு இதற்கு முன்பு பிலேமோனுக்கு பிரயோஜனமில்லாதவர். அவர் பரிசுத்தமில்லாதவர். பரிசுத்தமில்லாத ஜனங்களினால் ஒரு பிரயோஜனமும் உண்டாகாது. தேவகிருபை நமக்கு வரும்போது நாம் பரிசுத்தமாக்கப் படுகிறோம். பிரயோஜனமுள்ளவர்களாகிறோம். ஒநேசிமு பிலேமோனோடு கூடயிருந்தபோது பரிசுத்தமில்லாமலும், அவருக்கு பிரயோஜனமில்லாமலும் இருந்தார். அவர் பவுலிடத்தில் வந்த பின்போ இரட்சிக்கப்பட்டிருக்கிறார். பரிசுத்தமாக்கப் பட்டிருக்கிறார். நீதிமானாக்கப்பட்டிருக்கிறார். இப்போது ஒநேசிமு பிலேமோனுக்கும், பவுலுக்கும் பிரயோஜனமுள்ளவர் (பிலே 11).

ஒநேசிமு இரட்சிக்கப்பட்ட நாளிலிருந்து அவர் பவுலோடு கூடயிருக்கிறார். பவுல் சிறைச்சாலையில் கட்டப்பட்டிருக்கும்போது ஒநேசிமு அவருக்கு அநேக உதவிகளைச் செய்திருக்கிறார். ஒநேசிமு என்னும் பெயருக்கு "பிரயோஜனமுள்ளவர்" என்று பொருள். ஒநேசிமு இப்போது தன் பெயருக்கேற்ற பிரகாரம் எல்லோருக்கும் பிரயோஜனமுள்ளவராகயிருக்கிறார்.

பவுல் அன்பாகவும் மென்மையாகவும் வார்த்தைகளைப் பயன்படுத்தி இந்த நிருபத்தை எழுதுகிறார். மிகுந்த மரியாதையோடும், இரக்கத்தோடும் பவுல் பிலேமோனிடம் பேசுகிறார். அவர் ஒநேசிமுவைப்பற்றிச் சொல்லும்போது, ஒநேசிமு செய்த பழைய தப்பிதங்கள் எதையும் இப்போது குறிப்பிடவில்லை. ஒநேசிமுவை நினைத்து பிலேமோன் கோபப்படக்கூடாது. கர்த்தர் அவரை மன்னித்ததுபோல, பிலேமோனும் ஒநேசிமுவை மன்னிக்கவேண்டும். ஒநேசிமு இரட்சிக்கப்பட்டதினால் இப்போது நல்லவராகயிருக்கிறார். கர்த்தர் தீமையை நன்மையாக மாற்றுகிறவர். பிரயோஜனமில்லாததை பிரயோஜனமுள்ளதாக மாற்றித்தருகிறவர்.

அப்போஸ்தலர் பவுல் ஒநேசிமுவின்மீது தனக்கிருக்கிற அன்பை தெளிவாகச் சொல்லுகிறார். ஒநேசிமு பவுலின் உள்ளம் போலிருக்கிறார். அப்படிப்பட்ட ஒநேசிமுவை பவுல் பிலேமோனிடத்திற்கு அனுப்புகிறார். பிலேமோன் ஒநேசிமுவை ஏற்றுக்கொள்ளுமாறு மன்றாடுகிறார் (பிலே 14). பிலேமோன் மிகவும் நல்லவர்தான். ஆனாலும் பவுல் ஒநேசிமுவைப்பற்றி இப்படி நல்ல வார்த்தைகளை எழுதினால்தான், பிலேமோன் ஒநேசிமுவை மன்னிப்பார். இல்லையென்றால் ஒநேசிமு செய்த பழைய தப்பிதங்களை நினைவில் வைத்துக் கொண்டு, அவர்மீது கோபமாகவே இருப்பார்.

இக்காலத்து சபையில் பிலேமோனைப்போல நல்ல விசுவாசிகள் அநேகர் இருக்கிறார்கள். இவர்கள் தங்களுக்கு விரோதமாக யாராவது தப்பிதம் செய்திருந்தால் அவர்களை உடனே மன்னித்துவிடமாட்டார்கள். பிறரை மன்னிக்கக்கூடாது என்னும் பிடிவாதமும் இவர்களிடத்தில் இருக்காது. இப்படிப்பட்டவர்களிடத்தில் உண்மை நிலையை எடுத்துச் சொல்லி, அன்போடு பரிந்து பேசினால், இவர்களுடைய இருதயம் இரங்கும். தங்களுக்கு விரோதமாக தப்பு செய்தவர்களை மன்னிக்க முன்வருவார்கள்.

அப்போஸ்தலர் பவுல் ஒநேசிமுவை தன்னிடத்தில் வைத்துக்கொள்ள வேண்டுமென்று விரும்புகிறார். பவுலோ இப்போது சுவிசேஷத்தினிமித்தம் கட்டப்பட்டிருக்கிறார். பவுலுக்கு உதவி செய்ய ஒநேசிமுவைப்போல ஒருவர் தேவைப்படுகிறார். தனக்கு ஊழியம் செய்யும்படி ஒநேசிமுவைத் தானே வைத்துக்கொள்ளவேண்டுமென்று பவுல் விரும்புகிறார். ஒநேசிமுவை பிலேமோனிடத்தில் அனுப்ப பவுலுக்கு மனமில்லை.

பவுல் சுவிசேஷத்தினிமித்தம் சிறைச்சாலையில் கட்டப்பட்டிருக்கிறார். இங்கு அவருக்கு சிநேகிதர்கள் தேவைப்படுகிறார்கள். அவருக்கு உதவிசெய்ய ஊழியக்காரர் தேவைப்படுகிறார்கள். ஒநேசிமு பவுலுக்கு ஒரு மகனைப்போல கூடயிருந்து உதவி செய்கிறார். அவருக்கு எப்போதெல்லாம் உதவி தேவைப்படுகிறதோ, அப்போதெல்லாம் உதவி செய்ய ஆயத்தமாயிருக்கிறார். இப்படிப்பட்ட ஒநேசிமுவை பிலேமோனிடத்திற்கு அனுப்பாமல், தன்னிடத்திலேயே வைத்துக்கொண்டால் தனக்குப் பிரயோஜனமாயிருக்குமென்று பவுல் நினைக்கிறார் (பிலே 13).

ஆனாலும் பிலேமோனுடைய சம்மதமில்லாமல் பவுல் தன் இஷ்டப்படி செயல்பட விரும்பவில்லை. ஒநேசிமு பிலேமோனின் ஊழியக்காரர். அவர் பிலேமோனுக்குத்தான் ஊழியம் செய்யவேண்டும். அதுதான் சரியானது. ஒநேசிமுவை தன்னிடத்தில் வைத்துக் கொள்ள வேண்டுமென்று விரும்பினாலும், பிலேமோனின் சம்மதமில்லாமல், பவுல் ஒநேசிமுவைத் தன்னிடத்தில் வைத்துக் கொள்ளக்கூடாது. பவுலுக்கு ஒநேசிமுவின் ஊழியம் தேவைப்பட்டாலும், அவரை பிலேமோனின் சம்மதமில்லாமல் தன்னிடத்தில் வைத்துக்கொள்ள பவுல் விரும்பவில்லை.

பவுலுக்கு ஒநேசிமுவை அனுப்ப மனமில்லாமலேயே, அவரை பிலேமோனிடத்திற்கு அனுப்புகிறார். தன் உள்ளம் போலிருக்கிற அவரை பிலேமோன் ஏற்றுக்கொள்ளுமாறு அவரிடத்தில் மன்றாடுகிறார். பிலேமோன் அநேக நன்மைகளைச் செய்கிறவர். தான் செய்த நன்மைகளை அவர் கட்டாயத்தினால் செய்யக்கூடாது. மனப்பூர்வமாய்ச் செய்யவேண்டும். பிலேமோனிடத்தில் பவுல் விரும்பிக் கேட்டுக்கொண்டால், ஒநேசிமு பவுலிடத்திலேயே தங்கியிருந்து அவருக்கு ஊழியம் செய்ய, பிலேமோனும் சம்மதம் தெரிவிப்பார். தனக்கு ஒநேசிமுவின் உதவி தேவைப்பட்டாலும், பிலேமோனுக்குரிய ஒநேசிமுவை, பிலேமோனுடைய சம்மதமில்லாமல் தன்னிடத்தில் வைத்துக்கொள்ள பவுலுக்கு மனதில்லை (பிலே 16).

ஒநேசிமுவின் இருதயத்தில் இப்போது மிகப்பெரிய மாற்றமுண்டாயிருக்கிறது. அவர் பிலேமோனிடத்தில் இருந்தபோது இரட்சிக்கப்படாதவர். பவுலிடத்தில் வந்த பின்போ ஒநேசிமு இரட்சிக்கப்பட்டிருக்கிறார். ஒநேசிமு பிலேமோனிடத்தில் திரும்பி வந்தாலும், அவர் மறுபடியும் தன்னைவிட்டு ஓடிப்போய்விடுவாரோ என்று பிலேமோன் பயப்படவேண்டிய அவசியமில்லை. தனக்கு ஒநேசிமு ஏதாவது தீங்கு செய்வாரோ என்றோ அல்லது நஷ்டம் ஏற்படுத்திவிடுவாரோ என்றோ பிலேமோன் பயப்படவேண்டிய அவசியமில்லை.

அப்போஸ்தலர் பவுல் ஒநேசிமுவின் பழைய பாவங்களைப்பற்றி மென்மையான வார்த்தைகளினால் சொல்லுகிறார். ஒநேசிமு என்றென்றைக்கும் பிலேமோனுடையவர். கொஞ்சகாலம் அவரை விட்டுப் பிரிந்துபோனார். பிரிந்து போனதும் நன்மையில் முடிந்திருக்கிறது. இப்போது இரட்சிக்கப்பட்டிருக்கிறார். ஒநேசிமுவின் பழைய பாவசுபாவங்களெல்லாம் அவரை விட்டு நீங்கிப்போயிற்று. இப்போது அவருக்குள் நல்ல சுபாவங்கள் நிரம்பியிருக்கிறது.

ஒநேசிமு பிலேமோனைவிட்டு ஓடிப்போனதைப்பற்றி பவுல் சொல்லும்போது, "கொஞ்சக்காலம் உம்மைவிட்டுப் பிரிந்துபோனான்" என்று சொல்லுகிறார் (பிலே 15). ஒருவர் உண்மையாக மனந்திரும்பும்போது அவருடைய ஜீவியத்தில் மாற்றமுண்டாகும். ஒநேசிமு துன்மார்க்கராக பிலேமோனைவிட்டுப் பிரிந்துபோனார். இப்போதோ நல்லவராக அவரிடத்தில் திரும்பி வருகிறார். இது தேவனுடைய கிருபை. அவர் தம்மை விசுவாசிக்கிறவர்களுக்குச் செய்கிற நன்மை.

ஒநேசிமு இரட்சிப்பின் பாதையிலிருந்து விலகி ஓடிப்போனார். கர்த்தரோ தம்முடைய கிருபையினாலும், அன்பினாலும் வல்லமையினாலும் அவரை இரட்சிப்பின் பாதையில் வழிநடத்துகிறார். ஒநேசிமுவின் இருதயம் கொலோசெயில் கடின இருதயமாயிருந்தது. கர்த்தரோ ரோமாபுரியில் ஒநேசிமுவின் கடின இருதயத்தை மென்மையான இருதயமாக மாற்றுகிறார்.

ஒநேசிமு பவுலுக்கு பிரியமான சகோதரராயிருக்கிறார். அவர் பிலேமோனிடத்தில் திரும்பி வரும்போது இரட்சிக்கப்பட்ட சகோதரராகத் திரும்பி வருவார். பிலேமோன் அவரை ஏற்றுக்கொண்டால் ஒநேசிமு அவருக்கு அதிகப் பிரயோஜனமுள்ளவராகயிருப்பார். கர்த்தருடைய பிள்ளைகளெல்லோரும் ஆவிக்குரிய சகோதரர்களாக யிருக்கிறார்கள். சமுதாய அந்தஸ்துக்களிலும், பொருளாதார அந்தஸ்துக்களிலும் விசுவாசிகளுக்குள் வித்தியாசமும், ஏற்றத்தாழ்வும் இருக்கலாம். என்றாலும் விசுவாசிகளாகிய நம் எல்லோருக்கும் பரலோக பிதா ஒருவரே.

விசுவாசிகளெல்லோரும் கர்த்தருடைய பிள்ளைகளாகயிருந்தாலும், நாம் நிறைவேற்ற வேண்டிய கடமைகளை கருத்தாய்ச் செய்யவேண்டும். நம்முடைய வேலையில் உண்மையுள்ளவர்களாக யிருக்கவேண்டும். நம்முடைய எஜமான் விசுவாசியாகயிருக்கும்போது, அவர் நம்முடைய ஆவிக்குரிய சகோதரர் என்று நினைத்து, அவருக்கு ஒழுங்காய் வேலை செய்யாமல் அவரை ஏமாற்றக்கூடாது. நாம் எங்கு வேலை செய்தாலும் நம்முடைய வேலைகளை நேர்த்தியாய்ச் செய்யவேண்டும்.

வேலைக்காரர்கள் விசுவாசிகளாகயிருக்கும் போது, தங்களுடைய கடின உழைப்பின் மூலமாய் கர்த்தருடைய நாமத்தை மகிமைப்படுத்த வேண்டும். அவிசுவாசிகளான வேலைக்காரருக்கும் நமக்கும் வித்தியாசமுண்டு. நம்முடைய வேலையிலும் நாம் கர்த்தருக்குச் சாட்சியாயிருக்கவேண்டும். ஒநேசிமு சரீரத்தின்படியும், கர்த்தருக்குள்ளும் பிலேமோனுக்கு பிரியமுள்ளவராயிருப்பார் (பிலே 16).

நம்முடைய இருதயத்தில் கிருபை நிரம்பியிருக்கவேண்டும். அப்போது தான் கர்த்தர் தம்முடைய கிருபையை நமக்குக் காண்பிப்பார். நாம் பிறருக்கு இரக்கம் காண்பிக்கும்போது மற்றவர்களும் நமக்கு இரக்கம் காண்பிப்பார்கள். வேலைக்காரர்கள் தங்கள் எஜமான்களுக்கு உண்மையுள்ளவர்களாய் ஊழியம் செய்யும்போது, எஜமான்களும் அவர்களுக்கு உண்மையுள்ளவர்களா யிருப்பார்கள். தங்கள் வேலைக்காரர்களை நன்றாய் ஆதரிப்பார்கள்.

ஒநேசிமு இப்போது கர்த்தருடைய ஊழியக்காரராகவும், பிலேமோனுக்கு வேலைக்காரராகவும் இருக்கிறார். அவர் பவுலிடத்திலிருந்தபோது, ஒநேசிமு அவருக்கு மிகவும் பிரியமுள்ளவராயிருந்தார். ஒநேசிமு பிலேமோனிடத்தில் திரும்பி வரும்போது, அவர் ஒநேசிமுவுக்கு மிகவும் பிரயோஜனமுள்ளவராயிருப்பார்.

பரிசுத்தவான்கள் ஒருவருக்கொருவர் ஐக்கியமாயிருக்கிறார்கள். பவுலும் பிலேமோனும் கர்த்தருக்குள் ஐக்கியமாயிருக்கிறார்கள். பிலேமோன் ஒநேசிமுவை ஏற்றுக்கொள்ள வேண்டுமென்று பவுல் மன்றாடும்போது, தனக்கும் பிலேமோனுக்கும் இடையிலுள்ள ஐக்கியத்தைப்பற்றிச் சொல்லுகிறார். பவுலும் ஒநேசிமுவும் இரட்சிக்கப்பட்டவர்கள். கர்த்தரைத் தங்கள் இரட்சகராகவும் ஆண்டவராகவும் விசுவாசிக்கிறவர்கள். பவுலோ அப்போஸ்தல ஊழியம் செய்கிறார். ஒநேசிமுவோ கர்த்தருக்குள் ஒரு சாதாரண விசுவாசி. இவர்கள் இருவருடைய ஆவிக்குரிய நிலைமையில் வித்தியாசமிருக்கிறது. ஆனாலும் பிலேமோன் தன்னை ஏற்றுக்கொள்வதுபோல, ஒநேசிமுவையும் ஏற்றுக்கொள்ள வேண்டுமென்று பவுல் பிலேமோனிடம் மன்றாடுகிறார் (பிலே 17).

ஒநேசிமு பிலேமோனுக்கு ஏதாவது அநியாயம் செய்திருக்கலாம். ஒருவேளை பிலேமோனிடத்தில் கடன்பட்டிருக்கலாம். அதை தன்னுடைய கணக்கிலே வைத்துக்கொள்ளுமாறு பவுல் பிலேமோனுக்குச் சொல்லுகிறார். பிலேமோன் ஒநேசிமுவைத் தன்னிடத்தில் வைத்துக்கொள்வதினால் பிலேமோனுக்கு ஒரு நஷ்டமும் உண்டாகாது. ஏதாவது நஷ்டம் இருக்குமென்றால், அதை பவுலே தாங்கிக்கொள்ள ஆயத்தமாயிருக்கிறார்.

ஒநேசிமு பிலேமோனுக்கு கடன்பட்டிருக்கிறார். நாம் இரட்சிக்கப்பட்டாலும், நாம் வாங்கிய பழைய கடன்களை செலுத்தித் தீர்க்கவேண்டும். ஆத்தும இரட்சிப்பு நம்முடைய பாவத்திலிருந்து நமக்கு விடுதலை கொடுக்கிறது. நாம் பட்ட பழைய கடனிலிருந்து, இது நமக்கு விடுதலை கொடுக்காது. இரட்சிக்கப்பட்டவர்கள் தாங்கள் பட்ட கடனை முறுமுறுப்பில்லாமல் செலுத்தித் தீர்க்கவேண்டும்.

உண்மையாய் மனந்திரும்புகிறவர்கள் தங்களுடைய பழைய பாவங்களைத் திரும்பிப் பார்க்கவேண்டும். யாருக்காவது நாம் அநியாயம் செய்திருந்தோமானால், அந்த அநியாயங்களை நிவிர்த்தி செய்வதற்கு நாம் பிரயாசப்படவேண்டும். நாம் யாருக்காவது காயம் ஏற்படுத்தியிருந்தோமென்றால், அந்தக் காயங்களைக் கட்டுவதற்கு முன்வரவேண்டும். நாம் கடன்பட்டிருந்தோமென்றால், அந்தக் கடன்களைச் செலுத்தித் தீர்ப்பதற்கு பிரயாசப்படவேண்டும் (பிலே 18).

கர்த்தருடைய பிள்ளைகளாகிய நாம் ஒருவருக்கொருவர் ஐக்கியமாயிருக்கிறோம். நம்முடைய பரலோக பிதா ஒருவரே. ஆனாலும் இப்பிரபஞ்சத்தில் கர்த்தருடைய பிள்ளைகளாகிய நம் ஒவ்வொருவருக்கும் வீடு, நிலம், சொத்து ஆகியவை தனித்தனியாகவே இருக்கிறது. எல்லா விசுவாசிகளும் கர்த்தருக்குள் ஐக்கியமாயிருந்தாலும், விசுவாசிகளுடைய எல்லா சொத்துக்களும் பொதுவாகயிருப்பதில்லை. அவரவர்களுடைய சொத்துக்கள் அவர்களுக்கே உரியது. பவுல் பிலேமோனுடைய சொத்துக்களை அங்கீகரிக்கிறார்.

ஒநேசிமு இன்னும் பிலேமோனின் வேலைக்காராகவே இருக்கிறார். இதற்கு முன்பு ஒநேசிமு பிலேமோனுக்குச் செய்த தப்பிதங்களை, ஒநேசிமு நிவிர்த்திசெய்யவேண்டும். தான் பட்ட கடன்களைச் செலுத்தித் தீர்க்கவேண்டும். கர்த்தருடைய பிள்ளைகள் தேவை ஏற்படும்போது, மற்ற விசுவாசிகள் செலுத்த வேண்டிய கடனுக்கு பொறுப்பு ஏற்கலாம். இதை மிகுந்த ஜெபத்தோடும் கவனத்தோடும் செய்யவேண்டும். இப்படி செய்வதினால் விசுவாசிகளுக்குள் ஐக்கியம் முறிந்துவிடக்கூடாது.

பவுல் ஒநேசிமுவின்மீது மிகுந்த அன்பு வைத்து, அவர் பட்ட கடனை தன் கணக்கிலே வைத்துக்கொள்ளுமாறு சொல்லுகிறார். பவுல் ஒநேசிமுவை நம்புகிறார். அவருடைய இரட்சிப்பின் அனுபவத்தை நம்புகிறார். அவர் இனிமேல் ஏமாற்றமாட்டார் என்று பவுல் நம்புகிறார். ஒநேசிமுதான் பவுலின் நம்பிக்கைக்குப் பாத்திரவானாக நடந்துகொள்ளவேண்டும்.

அப்போஸ்தலர் பவுல் இந்த நிருபத்தை தன் சொந்தக் கையால் எழுதுகிறார். ஒநேசிமு பிலோமோனிடத்தில் ஏதாவது கடன்பட்டிருந்தால், அதை தன்னுடைய கணக்கிலே வைத்துக்கொள்ளுமாறு பவுல் எழுதுகிறார். தான் அதை செலுத்தித் தீர்ப்பதாக உறுதியண்ணுகிறார். பவுல் பிலேமோனுக்கு ஆவிக்குரிய நன்மைகள் ஏராளம் செய்திருக்கிறார். இவையெல்லாவற்றிற்கும் பிலேமோன் பவுலுக்கு நன்றியுள்ளவராகயிருக்க வேண்டும். பிலேமோன் பவுலுக்கு தன்னைத்தானே கடனாகச் செலுத்தவேண்டும். அந்த அளவுக்கு பவுல் பிலேமோனுக்கு அதிக நன்மைகளைச் செய்திருக்கிறார் (பிலே 19).

பிலேமோன் ஆவிக்குரிய ஆசீர்வாதங்களை ஏராளமாய்ப் பெற்றிருக்கிறார். இந்த ஆசீர்வாதங்களைப் பெற்றுக்கொள்வதற்கு பவுலே பிலேமோனுக்கு முக்கிய கருவியாகயிருந்தவர். இதற்கு ஈடாக பிலேமோன் பவுலுக்கு என்ன கொடுக்கவேண்டுமென்பதை அவரே தீர்மானம்பண்ணவேண்டும். அவர் தன்னைத்தானே கொடுக்க வேண்டுமென்று பவுல் எதிர்பார்க்கிறார். ஒநேசிமு பிலேமோனுக்கு பணம்தான் கொடுக்கவேண்டும். ஆனால் பிலேமோனோ பவுலுக்கு தன்னையே கொடுப்பதற்கு கடன்பட்டிருக்கிறார்.

தனக்கு பிலேமோனாலே கர்த்தருக்குள் பிரயோஜனமுண்டாக வேண்டும் என்று பவுல் எதிர்பார்க்கிறார். தன் உள்ளத்தை அவர் கர்த்தருக்குள் இளைப்பாறப்பண்ணவேண்டும் என்று அவரிடத்தில் வேண்டிக்கொள்கிறார். அப்போஸ்தலர் பவுலுக்கு பிலேமோனிமித்தமாய் சந்தோஷமும் ஆறுதலும் உண்டாயிற்று. அவர் ஒநேசிமுவை மன்னித்து மறுபடியும் ஏற்றுக்கொண்டால், பவுலின் ஆறுதலும் சந்தோஷமும் அதிகரிக்கும். பிலேமோனும் பவுலுக்கு விசுவாசத்தில் ஒரு குமாரனைப்போல இருக்கிறார். ஆனால் பவுலோ பிலேமோனை, "சகோதரனே" என்று அழைக்கிறார் (பிலே 20).

ஒநேசிமு ஒரு ஏழை அடிமை. ஆனாலும் ஒநேசிமுக்காக மன்றாடும்போது, தன்னுடைய சொந்த காரியத்திற்காக மன்றாடுவதுபோல, பவுல் பிலேமோனிடத்தில் பரிந்து பேசுகிறார். கர்த்தருடைய பிள்ளைகளாகிய நாம் மற்றவர்களுடைய இருதயங்களில் சந்தோஷத்தை உண்டுபண்ணவேண்டும். நம்முடைய பேச்சும், செய்கையும் பிறருக்கு சந்தோஷத்தையும், சமாதானத்தையும் கொடுக்கவேண்டும்.

விசுவாசிகளுக்கு இப்பிரபஞ்சத்தில் பாடுகளும் உபத்திரவங்களும் உண்டு. நாம் இந்த உலகத்திற்குரியவர்களல்ல. உலகப்பிரகாரமான ஜனங்கள் மூலமாய் நமக்கு நன்மை உண்டாகாது. தீமையே உண்டாகும். நாம் இந்த உலகத்திலிருந்து பாடுகளையும் வேதனைகளையும் தான் எதிர்பார்க்கிறோம். நமக்கு கர்த்தருடைய பிள்ளைகள் உதவியாயும் ஆறுதலாயும் இருக்கவில்லையென்றால், வேறு யாரும் உதவி செய்யமாட்டார்கள். நம்முடைய ஆறுதலையும் சந்தோஷத்தையும் கர்த்தருடைய பிள்ளைகளிடமிருந்துதான் நாம் எதிர்பார்க்கவேண்டும். கர்த்தருடைய பிள்ளைகள் ஒவ்வொருவரும், தங்களைப்போன்ற மற்ற விசுவாசிகளுக்கு சந்தோஷமும் ஆறுதலும் கொடுக்க முயற்சி பண்ணவேண்டும்.

பவுல் தன்னுடைய சொந்தப் பிரயோஜனத்தை பிலேமோனிடத்தில் எதிர்பார்க்கவில்லை. சரீரப்பிரகாரமாக தன்னுடைய உள்ளம் இளைப்பாற வேண்டுமென்று பவுல் பிலேமோனிடத்தில் மன்றாடவில்லை. தனக்கு எது நடந்தாலும் அது கர்த்தருக்குள் நடக்க வேண்டுமென்று பவுல் விரும்புகிறார். கர்த்தருக்குள் தனக்குப் பிரயோஜனமுண்டாகவேண்டும் என்றும், கர்த்தருக்குள் தன் உள்ளம் இளைப்பாறவேண்டுமென்றும் பவுல் விரும்புகிறார். இது அவருடைய சுயஆசையோ, சுயவிருப்பமோ அல்ல. கர்த்தருக்குப் பிரியமானது தன்னுடைய ஜீவியத்தில் நடைபெறவேண்டும் என்று பவுல் எதிர்பார்க்கிறார்.

பிலேமோன் தனக்கு நன்மை செய்வார் என்று பவுல் எதிர்பார்க்கிறார். தான் சொல்லுவதற்கும் அதிகமாக பிலேமோன் செய்வார் என்று பவுல் அறிந்திருக்கிறார். தன்னுடைய மன்றாட்டிற்கு அவர் இணங்குவாரென்றும் நிச்சயித்திருக்கிறார். இந்த நம்பிக்கையிலேயே பவுல் பிலேமோனுக்கு இந்த நிருபத்தை எழுதுகிறார் (பிலே 21).

கர்த்தருடைய பிள்ளைகளாகிய நம்முடைய இருதயத்திலும் நல்ல சிந்தனைகளும், நல்ல எதிர்பார்ப்புக்களும் காணப்படவேண்டும். இருதயம் சுத்தமாகயிருந்தால்தான் நம்முடைய கிரியைகளும் சுத்தமாகயிருக்கும். நாம் நற்காரியங்களைச் செய்தால்தான், மற்றவர்கள் நம்மிடமிருந்து நற்கிரியைகளை எதிர்பார்ப்பார்கள். கர்த்தருடைய பிள்ளைகள் எப்போதும் நற்கிரியைகளைச் செய்ய ஆயத்தமாயிருக்கவேண்டும். நாம் செய்கிற நற்கிரியைகளை கஞ்சத்தனம் இருக்கக்கூடாது. நற்கிரியைகளைத் தாராளமாய்ச் செய்யவேண்டும்.

பிலேமோன் தான் கேட்டுக்கொள்வதைவிட அதிகமாய்ச் செய்வார் என்று பவுல் எதிர்பார்க்கிறார். நம்மிடத்திலும் ஒரு சிலவிசுவாசிகள் உதவி கேட்கலாம். உதவி கேட்கிறவர்களை ஏளனம்பண்ணக்கூடாது. அவர்களை அசட்டைபண்ணக்கூடாது. நம்மால் முடிந்த உதவிகளை மனப்பூர்வமாய்ச் செய்யவேண்டும். விசுவாசிகள் நம்மிடத்தில் கேட்பதற்கும், எதிர்பார்ப்பதற்கும் அதிகமாய் உதவிசெய்யவேண்டும்.

முடிவுரை
பிலே 1 : 22-24

பிலே 1:22. மேலும், உங்கள் விண்ணப்பங்களினாலே நான் உங்களுக்கு அநுக்கிரகிக்கப் படுவேனென்று நம்பியிருக்கிறபடியால், நான் இருக்கும்படிக்கு ஓரிடத்தை எனக்காக ஆயத்தம்பண்ணும்.

பிலே 1:23. கிறிஸ்து இயேசுவினிமித்தம் என்னோடேகூடக் காவலில் வைக்கப்பட்டிருக்கிற எப்பாப்பிராவும்,

பிலே 1:24. என் உடன்வேலையாட்களாகிய மாற்குவும், அரிஸ்தர்க்கும், தேமாவும், லூக்காவும் உமக்கு வாழ்த்துதல் சொல்லுகிறார்கள்.

அப்போஸ்தலர் பவுல் இந்த நிருபத்தை எழுதும்போது ரோமாபுரியில் கிறிஸ்துவினிமித்தம் சிறைச்சாலையில் அடைக்கப்பட்டிருக்கிறார். தனக்கு சீக்கிரத்தில் விடுதலை உண்டாகுமென்று கர்த்தருக்குள் நம்பிக்கையாயிருக்கிறார். ஏராளமான விசுவாசிகள் பவுலின் விடுதலைக்காக ஜெபிக்கிறார்கள். அவர்களுடைய விண்ணப்பங்களி னிமித்தமாய் தனக்கு விடுதலை உண்டாகுமென்று பவுல் எதிர்பார்க்கிறார்.

தான் அவர்களுக்கு அநுக்கிரகக்கப்படுவேன் என்று பவுல் கர்த்தருக்குள் நம்புகிறார். தான் அவர்களுக்கு ஆவிக்குரிய ரீதியாக பிரயோஜனமுள்ளவராக இருப்பேனென்று பவுல் எதிர்பார்க்கிறார். அவர்களை சீக்கிரத்தில் காண்பதற்கு தனக்கு வாய்ப்புண்டாகும் என்னும் நம்பிக்கையோடு, தான் இருக்கும்படிக்கு தனக்கு ஒரு இடத்தை ஆயத்தம்பண்ணுமாறு, பிலேமோனிடத்தில் வேண்டிக்கொள்கிறார்.

பவுல் பிலேமோனின் விருந்தினராக தங்கியிருந்து ஊழியம் செய்ய விரும்புகிறார். தான் தங்கும் இடத்தை பிலேமோனே ஆயத்தம்பண்ண வேண்டுமென்று எதிர்பார்க்கிறார். அந்த அளவுக்கு பவுல் பிலேமோனிடத்திலும், பிலேமோன் பவுலினிடத்திலும் அன்பு வைத்திருக்கிறார்கள். இவர்கள் இருவருக்கும் இடையே நெருங்கிய ஐக்கியமும், அன்பும் இருக்கிறது. பிலேமோன் பவுல்மீது மரியாதை வைத்திருக்கிறார். ஆகையினால் ஒநேசிமுவுக்காக தான் ஏறெடுக்கிற மன்றாட்டை பிலேமோன் மறுக்காமல் அங்கீகரிப்பார் என்று பவுல் நம்புகிறார்.

விசுவாசிகளுடைய விண்ணப்பங்களினால் தான் அவர்களுக்கு அநுக்கிரகிக்கப்படுவேன் என்று பவுல் நம்புகிறார். தான் அவர்களிடத்தில் ஒப்புக்கொடுக்கப்படுவேன் என்று பவுல் எதிர்பார்க்கிறார். பவுல் இப்போது சிறைச்சாலையிலிருக்கிறார். கர்த்தருடைய சித்தம் என்ன என்பது பவுலுக்கு சரியாகத் தெரியவில்லை. சிறைச்சாலையில் தனக்கு என்ன நடைபெறும் என்னும் நிச்சயமும் அவரிடத்தில்லை. ஆனாலும் விசுவாசிகள் பவுலுக்காக ஜெபிக்கிறார்கள். கர்த்தர் அவர்களுடைய விண்ணப்பங்களைக் கேட்டு, தனக்கு விடுதலை கொடுப்பார் என்று பவுல் நம்புகிறார்.

அநேகருடைய ஜெபங்களினாலும், ஸ்தோத்திரங்களினாலும் கிருபை பெருகும். பவுலுக்காக ஏராளமான விசுவாசிகள் ஜெபம்பண்ணுவதினால், தனக்கு சிறைச்சாலையிலிருந்து விடுதலை கிடைக்குமென்று பவுல் நம்புகிறார். அவர்களை மறுபடியும் காண்பதற்கு வாய்ப்பு உண்டாகும் என்று எதிர்பார்க்கிறார். பவுலுக்கு சிறைச்சாலையிலிருந்து விடுதலை உண்டாகும்போது, பவுல் மூலமாய் அவர்களுக்கு ஆவிக்குரிய விடுதலை உண்டாகும்.

கர்த்தருடைய பிள்ளைகள் கர்த்தரை நம்பவேண்டும். ஜெபத்தில் உறுதியாய்த் தரித்திருக்கவேண்டும். ஜெபம் ஜெயம் தரும். ஜெபம் பரலோகத்தின் வாசல்களைத் திறக்கும். கட்டுகளை உடைக்கும். சிறைச்சாலையின் கதவுகளைத் திறக்கும். ஒரு சாதாரண விசுவாசிகூட பவுலைப்போன்ற ஒரு பெரிய அப்போஸ்தலருக்காக ஜெபம்பண்ணலாம். விசுவாசிகள் ஊழியக்காரர்களுக்காக ஜெபம்பண்ணுவது, அவர்கள் ஊழியக்காரருக்குச் செய்கிற பெரிய உதவி.

கர்த்தர் நம்முடைய ஜெபத்திற்குப் பதில் கொடுப்பார். நமக்குக் கிடைத்திருக்கிற பதிலும் விடுதலையும் நம்முடைய சுயபக்தியினாலோ, சுயமுயற்சியினாலோ உண்டாவதில்லை. இது தேவனுடைய ஈவு. கர்த்தருடைய பிள்ளைகள் ஊழியக்காரருக்காக ஜெபிக்கும்போது, அவர்கள் உண்மையில் தங்களுக்காகவே ஜெபிக்கிறார்கள். ஊழியக்காரர்கள் விடுவிக்கும்போது, அவர்கள் விசுவாசிகளுக்கு ஆசீர்வாதமாக யிருப்பார்கள். சிறையிலிருந்து பவுல் விடுதலை பெறும்போது, சிறைக்கு வெளியே அவர் தனக்காக ஜீவிக்க மாட்டார். தன் சுயபிரயோஜனத்தைத் தேடமாட்டார். கர்த்தருடைய ஊழியத்தைச் செய்வதற்காக பவுல் தன்னை மறுபடியுமாக ஒப்புக்கொடுப்பார். விசுவாசிகளின் சந்தோஷத்திற்காகவும் சமாதானத்திற்காகவும் பவுல் ஊழியம் செய்வார். பவுல் மூலமாய் விசுவாசிகளுக்கு அநுக்கிரகம் உண்டாகும். விசுவாசிகள் பவுலுக்காக ஜெபிக்கும்போது, அவர்கள் மெய்யாகவே தங்களுடைய அநுக்கிரகத்திற்காகவே ஜெபிக்கிறார்கள்.

அப்போஸ்தலர் பவுல் பிலேமோனுக்கு வாழ்த்துதல் சொல்லுகிறார். அவரை வாழ்த்தும்போது கிறிஸ்து இயேசுவினிமித்தம் தன்னோடு சிறைச்சாலையில் கட்டப் பட்டிருக்கிறவர்களும், அவருக்கு வாழ்த்துதல் சொல்லுவதாக எழுதுகிறார் (பிலே 23, 24). எப்பாப்பிரா கிறிஸ்து இயேசுவினிமித்தம் பவுலோடுகூட காவலில் வைக்கப்பட்டிருக்கிறார். அவர் கொலோசெ பட்டணத்தைச் சேர்ந்தவர். பிலேமோனின் தேசத்தார். எப்பாப்பிரா பவுலோடுகூட ரோமாபுரிக்கு வந்து, இப்போது கிறிஸ்து இயேசுவினிமித்தம் காவலில் வைக்கப்பட்டிருக்கிறார்.

கிறிஸ்து இயேசுவினிமித்தம் பவுல் மாத்திரம் காவலில் வைக்கப்பட்டிருக்கவில்லை. அவரோடுகூட கர்த்தருடைய பரிசுத்தவான்களில் சிலரும் காவலில் வைக்கப்பட்டிருக்கிறார்கள். அவர்கள் பவுலுக்கு கர்த்தருக்குள் உடன்ஊழியக்காரர்கள். இப்போதோ அவர்கள் கிறிஸ்து இயேசுவினிமித்தம் பவுலோடுகூட காவலில் வைக்கப்பட்டிருக்கிறவர்கள். அப்போஸ்தலர் பவுல் இயேசுகிறிஸ்துவின் நாமத்தைச் சொல்லி, அவரை மகிமைப்படுத்துகிறார். தன்னுடைய இருதயத்தில் ஆறுதல் பெறுகிறார்.

கர்த்தருடைய பரிசுத்தவான்களுக்கு பாடுகளும் வேதனைகளும் உண்டாகும்போது, கர்த்தர் சில சமயங்களில், இன்னும் சில பரிசுத்தவான்களை அவர்களோடுகூட பாடுகளை அனுபவிக்க அனுமதிக்கிறார். இதன் மூலமாய் பரிசுத்தவான்களின் பாடுகள் குறைக்கப்படுகிறது. வேதனைகள் குறைக்கப்படுகிறது. பவுல் சிறைச்சாலையில் கட்டப்பட்டிருந்தாலும், கர்த்தருடைய பிள்ளைகளோடு அங்கு அவருக்கு ஐக்கியம் உண்டாயிருக்கிறது. இவர்களெல்லோரும் கிறிஸ்து இயேசுவினிமித்தம் காவலில் வைக்கப்பட்டிருக்கிறார்கள். தாங்கள் எல்லோருமாகச் சேர்ந்து கிறிஸ்துவுக்காக பாடுகளை அனுபவிப்பதை நினைத்து, ஊழியக்காரர்கள் ஆறுதல் பெறுகிறார்கள். சந்தோஷமடைகிறார்கள். பவுலோடுகூட எப்பாப்பிரா, மாற்கு, அரிஸ்தர்க்கு, தேமா, லூக்கா ஆகியோர் காவலில் வைக்கப்பட்டிருக்கிறார்கள். பவுல் அங்கு தனிமையாக பாடுகளை அனுபவிக்கவில்லை.

பவுல் இந்த நிருபத்தை பிலேமோனுக்கு ஒரு மன்றாட்டு நிருபமாக எழுதுகிறார். தன்னுடைய மன்றாட்டு நிராகரிக்கப்பட்டு விடக்கூடாது என்பதில் பவுல் கருத்தாயிருக்கிறார். பிலேமோன் தன் மன்றாட்டைக் கேட்டு, ஒநேசிமுவை மறுபடியுமாக ஏற்றுக்கொள்ளவேண்டும் என்பதில் பவுல் அதிகக் கவனம் செலுத்துகிறார். இதற்காக ஒநேசிமுவைப் பற்றியும், பிலேமோனைப்பற்றியும் அநேகக் காரியங்கள் எழுதுகிறார். இப்போது தன்னோடேகூட காவலில் வைக்கப்பட்டிருக்கிற கர்த்தருடைய பரிசுத்தவான்களும் பிலேமோனுக்கு வாழ்த்தல் சொல்லுவதாக எழுதுகிறார். இந்த நிருபத்தில் இத்தனைபேர் பிலேமோனுக்கு வாழ்த்துதல் சொல்லும்போது, பிலேமோன் பவுலின் மன்றாட்டை நிராகரிப்பதற்கு வாய்ப்பில்லை. பிலேமோன் கடின இருதயமுள்ளவரல்ல.

மாற்கு பர்னபாவின் உறவினர். மரியாளின் குமாரன். எருசலேமிலுள்ள பரிசுத்தவான்களை மாற்கும், அவருடைய தாயாரும் உபசரிக்கிறார்கள். மாற்குவினிமித்தமாய் பவுலுக்கும் பர்னபாவுக்கும் கருத்து வேறுபாடு உண்டாயிற்று. இருவரும் ஊழியப்பாதையிலே பிரிந்து, வெவ்வேறு இடங்களில் ஊழியம் செய்தார்கள். ஆனால் இப்போது பவுலும் மாற்கும் ஒப்புரவாகியிருக்கிறார்கள். இதனிமித்தமாய் பவுல் மாற்குவை அரிஸ்தர்க்குவோடு சேர்த்து எழுதுகிறார் (கொலோ 4:10). மாற்குவை கிறிஸ்து இயேசுவினிமித்தம் தன்னோடுகூட காவலில் வைக்கப்பட்டவர் என்று அங்கீகரிக்கிறார்.

பவுல் தேமாவைப்பற்றி இங்கு தப்பிதமாக ஒன்றும் எழுதவில்லை. இவர் மற்றவர்களோடு சேர்ந்து பவுலைவிட்டுப் பிரிந்துபோனவர். (2 தீமோ 4:10) லூக்கா பவுலுக்குப் பிரியமான வைத்தியர். சுவிசேஷகர். பவுலோடுகூட ரோமாபுரிக்கு வந்தவர். இப்போது கிறிஸ்து இயேசுவினிமித்தம் பவுலோடுகூட காவலில் வைக்கப்பட்டிருக்கிறார்.

ஜெபம்
பிலே 1:25

பிலே 1:25. நம்முடைய கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவின் கிருபை உங்கள் ஆவியுடனே கூட இருப்பதாக. ஆமென்.

BELLWETHER INTERNATIONAL

பிலேமோன் - விரிவுரை
PHILEMON - COMMENTARY

GOOD NEWS PUBLISHERS

அப்போஸ்தலர் பவுல் முடிவு ஜெபம்பண்ணி, அப்போஸ்தல ஆசீர்வாதம் சொல்லி இந்த நிருபத்தை நிறைவு செய்கிறார். கர்த்தராகிய இயேசுகிறிஸ்துவின் கிருபை உங்கள் ஆவியுடனே கூடயிருப்பதாக என்று வாழ்த்துகிறார். விசுவாசிகளுக்கு தேவனுடைய கிருபை கிடைக்க வேண்டுமென்று ஜெபிக்கிறார். கிருபை தேவனுடைய இலவச ஈவு. தேவனுடைய அன்பு அவருடைய கிருபையில் வெளிப்படுகிறது. அப்போஸ்தலர் பவுல் இந்த நிருபத்தை தேவனுடைய கிருபையைச் சொல்லி ஆரம்பித்தார். இப்போது அவருடைய கிருபையைச் சொல்லி நிருபத்தை நிறைவுசெய்கிறார்.

கர்த்தராகிய இயேசுகிறிஸ்துவிடமிருந்தே நமக்குத் தேவகிருபை வருகிறது. இயேசுகிறிஸ்து தம்முடைய கிருபையை இப்போது நமக்குக் கொடுக்கிறார். இயேசுகிறிஸ்துவின் கிருபை பிலேமோனோடு மாத்திரம் கூடயிருப்பதாக என்று சொல்லி வாழ்த்தாமல், "உங்கள் ஆவியுடனே கூடயிருப்பதாக" என்று சொல்லி, எல்லா பரிசுத்தவான்களையும் தன்னுடைய அப்போஸ்தல ஆசீர்வாதத்திற்கு பங்குள்ளவர்களாக்குகிறார்.

இந்த நிருபத்தில் பவுல் அநேகருடைய பெயரைக் குறிப்பிட்டிருக்கிறார். அவர்கள் எல்லோருடைய ஆவியுடனும் கர்த்தராகிய இயேசுகிறிஸ்துவின் கிருபை கூடயிருப்பதாக என்று வாழ்த்துகிறார். பிலேமோனுடைய வீட்டில் கர்த்தரை ஆராதிக்க கூடிவருகிற விசுவாசிகளெல்லோருக்கும் பவுல் ஆசீர்வாதம் சொல்லுகிறார்.

பவுல் இந்த நிருபத்தின் முடிவுரையில் "ஆமென்" என்று எழுதுகிறார். தன்னுடைய ஜெபத்தையும், வாழ்த்துதலையும், ஆமென் என்று சொல்லி உறுதிபண்ணுகிறார். "அப்படியே ஆவதாக" என்று சொல்லி அவர்களை ஆசீர்வதிக்கிறார். தன்னுடைய மன்றாட்டிற்கு அநுகூலமான பலன் உண்டாகும் என்று விசுவாசித்து, "அது அப்படியே ஆவதாக" என்று நம்பிக்கையோடு எழுதுகிறார்.

கர்த்தராகிய இயேசுகிறிஸ்துவின் கிருபை பிலேமோனுடைய ஆவியுடனே கூடயிருப்பதாக என்று பவுல் அவரை வாழ்த்துகிறார். அவருக்காக ஜெபிக்கிறார். கர்த்தருடைய கிருபை பிலேமோனுக்குக் கிடைக்கும்போது, அவர் ஒநேசிமுவை மன்னிப்பார். நம்முடைய பிதாவாகிய தேவன் கிறிஸ்துவினிமித்தமாய் நம்மை மன்னித்தார். இயேசுகிறிஸ்துவின் கிருபை பிலேமோனுடைய ஆவியுடனே கூடயிருக்கும்போது, பிதா பிலேமோனை மன்னித்ததுபோல, பிலேமோனும் ஒநேசிமுவை மன்னிப்பார்.